IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

OS.NO.12/2019

P.W.1-NETHAJI (அவரது தாயாருக்காக)

DATE:09.12.2020

முதல் விசாரணை தொடர்ச்சி.

என் மனைவியினுடைய ஸ்சுமார்ட் கார்டு அசல் மற்றும் நகல் தாக்கல் செய்கிறேன். அசலுடன் நகல் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டு அதன் நகல் வா.சா.ஆ7 ஆக குறியிடப்படுகிறது. என் மனைவியினுடைய ஆதார் அட்டை அசல் மற்றும் நகல் தாக்கல் செய்கிறேன். அசலுடன் நகல் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டு அதன் நகல் வா.சா.ஆ8 ஆக குறியிடப்படுகிறது. என்னுடைய மகன் மற்றும் மகளின் பள்ளியில் கொடுக்கப்பட்ட அடையாள அட்டையினுடைய அசல் மற்றும் நகல் தாக்கல் செய்கிறேன். அசலுடன் நகல் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டு அதன் நகல் வா.சா.ஆ9 வரிசையாக (2 எண்ணிக்கைகள்) குறியிடப்படுகிறது. என் மகன் மற்றும் மகளுடைய ஆதார் அட்டையின் அசல் மற்றும் நகல் தாக்கல் செய்கிறேன். அசலுடன் நகல் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டு அதன் நகல் வா.சா.ஆ10 வரிசையாக (2 எண்ணிக்கைகள்) குறியிடப்படுகிறது. வீட்டிற்கான வரி ரசீது 27.11.2014 தேதியிடப்பட்டது தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.11 ஆக குறியிடப்படுகிறது. என் வீட்டிற்கு தண்ணீர் வரிக்கு தொகை வைப்பீடு செய்ததற்கான ரசீது தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.12 ஆக குறியிடப்படுகிறது. தண்ணீர் வரி செலுத்தியதற்கான ரசீது தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.13 ஆக குறியிடப்படுகிறது. தாவா சொத்தினை காட்டும் புகைப்படம் 6 எண்ணிக்கைகள் மற்றும் அதற்கான சிடி தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.14 வரிசையாக குறியிடப்படுகிறது. என்னுடைய தாயாருக்கு ராஜ் நர்சிங் ஓமில் காது கேட்காதற்காக சிகிச்சை அளிக்கப்பட்டதற்கான ஆதாரம் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.15 குறியிடப்படுகிறது. ராமசந்திரா மருத்துவமனையில் இருந்த 01.09.2018ல் எனது தாயார் விடுவிக்கப்பட்டதற்கான விடுவிப்பு சான்றிதழ் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.16

குறியிடப்படுகிறது. ஜெலகண்டேஸ்வரர் கோயிலில் ஸ்ரீ.பி.பக்தவச்சலம் பெயருக்கு வழங்கப்பட்ட ரசீது தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.17 குறியிடப்படுகிறது. என் தாயார் பிரதிவாதிக்கு பெயருக்கு செட்டில் பத்திரம் 26.11.2018 தேதியில் பதிவு செய்து கொடுக்கப்பட்டதற்கான சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.18 ஆக குறியிடப்படுகிறது. காவல் நிலையத்தில் என் தாயாரால் கொடுக்கப்பட்ட புகாரின் நகல் மற்றும் அதனை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புமை அட்டை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.19 ஆக குறியிடப்படுகிறது. 24.12.2018ல் என் தாயார் தாசில்தார், காட்பாடிக்கு அனுப்பிய புகார் நகலின் ஜெராக்ஸ் மற்றும் அதனை தாசில்தார் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புமை அட்டை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.20 ஆக குறியிடப்படுகிறது. கிராம நிர்வாக அலுவலர் லத்தேரிக்கு மனு அனுப்பப்பட்டதற்கான ஜெராக்ஸ் நகல் மற்றும் அதனை கிராம நிர்வாக அலுவலர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புமை அட்டை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.21 ஆக குறியிடப்படுகிறது. என் பெயரில் என் தாயார் பொது அதிகார ஆவணம் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.22 ஆக குறியிடப்படுகிறது. (இந்த வா.சா.ஆ.22 பொது அதிகார ஆவணம் என குறிப்பிடப்பட்டிருந்தாலும் இந்த சொத்தினை பொருத்து நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக மட்டுமே இந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்டிருப்பது ஆவண பொருண்மைகளில் காணப்படுவதால் பொது அதிகார ஆவணம் என்று குறிப்பிடப்பட்டிருப்பதற்காக இது பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது).

பிரதிவாதி வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதிற்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.